**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.05.2022**

**Case No : CC 91 /2019**

**Deposition of Witness : P.W.2**

| | |
|---|---|
| **Name: மேரி** | **Caste:** |
| **Father / Husband Name:** அந்தோணி அருள்ராஜ் | **Calling:** |
| **Village: பூச்சிக்காடு** | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 50** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 17.05.2022**

முதல் விசாரணை :

நான் பூச்சிக்காடு கிராமத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் எனது ஊரைச்சேர்ந்தவர். எதிரியை தெரியும் அவரும் எனது ஊரைச்சேர்ந்தவர். எங்கள் ஊரில் உள்ள மகளிர் குழுவில் தலைவியாக உள்ளேன். அ.சா.1 அதில் உறுப்பினராக உள்ளார். வழக்கமாக 25ம் தேதி குழுவின் கூட்டம் நடைபெறும். கடந்த 25.04.2019ம் தேதியன்று வழக்கம்போல் குழுவின் கூட்டம் பூச்சிக்காட்டில் உள்ள கெபி முன்பு 3 மணிக்கு ஆரம்பித்தது. கூட்டத்தில் உறுப்பினர்கள் வரவர பணவிபரங்களை எழுதிக்கொண்டிருந்தோம். மாலை 6.30 மணிக்கு எதிரி அங்கு வந்தார். மாலை 6.30 மணியளவில் எதிரியின் அம்மா பாத்திமாவிடம் பணம் விஷயமாக பேசிக் கொண்டிருந்தோம். அப்போது எதிரி அ.சா.1யிடம் எப்படி எனது அம்மாவை கைநீட்டி பேசலாம் என்று சொல்லி முதுகில் கையால் அடித்தார்.

அதனால் அ.சா.1 அவரது கணவருக்கு போன் செய்து வரவைத்தார். அ.சா.1ன் கணவர் எதிரியை சத்தம் போட்டார். அதற்கு எதிரி அ.சா.1ன் கணவரின் சட்டையை பிடித்து இழுத்தார். பின்பு எதிரி கட்டையை எடுத்து அ.சா.1ன் தலையில் அடித்து விட்டார். அதனால் அ.சா.1 மயங்கி விழுந்து விட்டார். நாங்கள் தண்ணீர் தெளித்து எழுப்பி விட்டோம். எதிரி அ.சா.1ஐயும் அவரது மகளையும் தேவடியா மகளே என்று ஏசினார். இதுசம்பந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

அந்தோணியார் கெபியை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கோயில் பிரசித்தி பெற்றது என்பதால் அதிக நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் வழக்கு சம்பவத்தின்போது யார் யார் இருந்தார்கள் என்றும் எத்தனை நபர்கள் கலந்து கொண்டார்கள் என்றும் சொல்லியுள்ளேன். எங்கள் ஊருக்கு மொத்தம் 3 மினி பஸ்கள் வரும். திசையன்விளையிலிருந்து தட்டார்மடத்துக்கு வரும் பேருந்துகள் குறித்து நேரம் எனக்கு தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் அரைமணி நேரம் நடந்ததா என்றால் சுமார் ஒருமணி நேரம் வரை நடந்தது. அ.சா.1 எனது நெருங்கிய தோழி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d) Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.